98

98
1-57

உ

# மயூரகிரிபுராணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JAN 1957
MADRAS



பாலகவி

0-,14MR15,M
N57

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

# மயூரகிரியுலா.



கோநகர் சு. மு.

இராமசுப்பிரமணியன் செட்டியாரால்

தமது பதினெட்டாம் ஆண்டு நிறைவுக்கு
அறிகுறியாக இயற்றப்பெற்றது.

தேவகோட்டை செட்டிநாடு அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

முதற்பதிப்பு: ஸ்ரீமுக-௵
இரண்டாம்பதிப்பு: துன்முகி-௵

78293

உ

சிவமயம்

# சாற்றுக் கவிகள்

---

மகிபாலன்பட்டி. பண்டிதமணி,
மு. கதிரேசச்செட்டியாரவர்கள்:

வளமருவு மயூரகிரி வாழ்முருகன் றிருப்புகழை
மண்ணில் வாழ்வோர்
உளமருவி நலமடைய வொண்டமிழா லுலகவொன்றை
யுஞற்றித் தந்தான்
அளவிலறஞ் சிவபத்தி யாதிநிறை மாதேவர்க்
கமைந்த மைந்தன்
குளமருவு கோநகர்வாழ் இராமசுப் பிரமணியக்
குருசின் மாதோ.

---

அமராவதிபுதூர் வித்துவசிரோன்மணி
வயி நாக ராம. ஆ இராமநாதன்செட்டியாரவர்கள்

பலரப்போந்து விண்ணவர்க்குப் பழமுதவு மயூரகிரிப்
பதியரன் செவ்வே
ஞலராப்போந்த வுயர்ந்தபிர பந்தமுல குவந்திடநன்
குஞற்றி ஞனல்
துலாப்போந்த நிறைகுணக்கோ நகர்ச்சூனு முருகன்
சூனு சென்னி [பான்
நிலாப்போந்த வளையேத்தி ராமசுப்ர மணியகலா
நிதியன் ஞனே.

---

அமராவதிபுதூர், திரு, வயி. நாக. ராம. அ.
**வேங்கடாசலம்செட்டியாரவர்கள்:**

மூதறிவாளர் முதுமொழி யெனவே
யாவரும் போற்று மின்பமீ தூரக்
குன்ற நகரக் குமரக் கடவுள்
தன்றிரு வடியிற் சாத்துதற் குரித்தா
வுலாப்பிர பந்தமென் றுரையுயர் வண்மைப்
பாமாலை தன்னைப் பகர்ந்தனன் கோநகர்ச்
சிவபத்தி யாளன் சிறந்தமா தேவ
னுமமென் னுரு நவிற்றும் பெரியோன்
செய்தவப் பயனுய்ச் சிறக்கவந் துதித்தோன்
நற்குண சீல நயம்பெறு மொழியன்
இலக்கண மிலக்கிய மெழிலுறக் கற்றோன்
சித்திரப் பாக்கள் சீர்பெற வியற்றும்
வித்தகன் புலவர் வியக்குஞ் சிகாமணி
சமயப்ர சங்கம் சால்புற மொழிவோன்
இராமசுப் பிரமணிய நாவ லோனே.

---

பலவான்குடி 'சிவநேசன்' உதவியாசிரியர் திரு,
**உ. ரா. சுவாமிநாதபிள்ளை அவர்கள்:**

குமரன் மயூரகிரிக் கோமா னுலாவை
யமுதிற் புலவோ ரருந்தத்-தமிழிற்
புகரிராம லேபுனைந்து பூண்டான் புகழ்க்கோ
நகரிராம சுப்ரமண்ய னன்கு.

---

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு, மு. அருணாசலம்பிள்ளையவர்கள்

சொன்னயமும் பாடற் றொடையும் பொருட்சுவையும்
பன்னலமுந் தோன்றப் பகர்ந்தனனால்-பொன்னூர்
மயிலாகும் பாறை வடிவேலர் மீது
செயிர்தீ ருலாச்செய்யுள் தேர்ந்து
மற்றவன்யா ரென்னின் வணிகர் குலக்கொழுந்து
குற்றமிலா னற்குணத்தான் கோநகரான்-புற்றூர்
அராமதிசூ டிக்கன்ப னன்பர்க் கினியன்
இராமசுப்ர மண்ய னிவன்.

ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக் கழகத் தமிழ்ப் பண்டிதர், திரு வ மு இரத்தினேசுவரையரவர்கள்

குன்றைக் குமரனுக்கோர் கோதிலுலாச் சாற்றினான்
துன்றுபல மாமலரிற் றூயதேன-நன்றறிஞர்
செப்பமுரு கப்பவள்ளல் செய்தவத்தோன் பேர்ராம
சுப்பிர மண்யனென்றே சொல்
வானவர் நாயகன் குன்றைக் குமரன் வருபவனி
வானமிழ் தேய்ப்ப வகுத்தனன் கோநகர் வரசனுயர்
வானவர் போற்றுமா தேவன் மலரடி மன்னுமன
வானமை சீர்ராம சுப்ரமண் யன்மாண் வளர்குகவே.

பலவான்குடி திருவாசகமடத்திலிருந்த திரு, பொன்னம்பலசிவம் அவர்கள்:

மாதேவர் சேய்மஞ்ஞைச் சையசுப்ர மண்யற்கு
மாதேவா சேய்ராம சுப்ரமண்யன்—தீதில்
உலாப்பிரபந் தஞ்செய் துயர்ந்தா னூரனூர்
கலாப்புலவர் கண்டுவக்கக் காண்.

கோநகர்க் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமையாசிரியர்:
**திரு, தி. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்:**

*திருவருளுந் கோநகரிற் சீர்சாரு*
*மகாதேவச் செல்வ னீன்ற*
*வருள்வளரி ராமசுப் பிரமணிய*
*அன்பன்மிக வாய்ந்தே நீப*
*மருவளருந் தாருடையான் மாயூர*
*மாமலையான் மகிழு லாவோன்*
*றுருவளரச் செய்தமைத்தே யுயருலகிற்*
*புகழ்படைத்தா னூழி வாழி.*

மதுரை தமிழறிஞர் திரு,
**மு. முத்துவேங்கடாசலமையரவர்கள்:**

பூங்கமலத் தவன்முதலாம் புத்தேளிர் தினம்பரவத்
தேங்கிடுமா தரத்துடனிச் சேகமிறைஞ்சப் பலவரங்க
ளோங்கிடுமா யூரமேனு முயர்சயில மிசையினமர்ந்து
ஈங்கருளு மாறுமுகத் தெம்பிரான் பதமிசையே

பெருந்தனமாய்க் கல்வியினைப் பேணிவரு மறிஞர்குழீஇ
இருந்துபல கலைச்சுவையை யென்றென்று மெடுத்தருந்தத்
திருந்தியவச் சிந்தையையுந் திறைகொள்ளு மாண்புமிகப்
பொருந்துமுலாச் சூட்டியநற் புனிதவான் யாவனெனில்.

சித்தநனி கனிந்துருகுந் தீந்தமிழிற் பயிற்சியுளோன்
வித்தகனேத்துணைக்கவியும்விரைந்தியற்றும்வலியுடையா
னெத்திசையு மிவன்றந்தை யென்னேற்றனென்றுசொலச்
சித்திபெறு தனவணிகச் சீமானு விளங்கிடுவோன்.

கற்றைவார்சடைக்கடவுள் கழலிணையையுளத்தமைத்து
மற்றவன்றன் றிருநாம மகதேவப் பெயரதனை
நற்றவத்தா லெதுபோழ்து நவின்றுவரு முருகப்பன்
பெற்றருளி ராமசுப் பிரமணியப் பெருந்தகையே.

நெற்குப்பை தமிழறிஞர் திரு, லெ. ப. கரு.
**இராமநாதன் செட்டியாரவர்கள்:**

சீரருண்மா தேவனருட் செல்வனுயர் கோநகரான்
ஆரிராம சுப்ரமணி யப்பெயரான்-பேரமிர்தோ
மன்மலையோ வென்ன மயூர கிரியுலா
நன்கிசைத்தான் வாழ்கபன் னுள்.

பரிமணங்குடி, சைவசன்மார்க்க சங்கம் திரு,
**மு. முத்துப்பிள்ளையவர்கள்:**

ஏர்மருவுங் குன்றைமுரு கேசனுலாச் செந்தமிழாற்
சீர்மருவுங் கோநகர்மா தேவன்சேய்-பார்மருவெப்
பாவினையு நன்கு பயில்ராம சுப்ரமண்யன்
பூவுலகிற் சொற்றான் புகழ்ந்து.

மேலச்சிவபுரி, தமிழறிஞர் **அ. சிதம்பரசுவாமி**அவர்கள்

சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா.

மாமலையி னிடைப்பிறந்து மாட்சிமிகு தொல்லுலகில்
நாமலைவு திருதற்கு நடத்திடுஞ்சீ ருயர்தமிழாம்
பாநவிலும் பண்புடையான் பன்னவரும்விரும்பியமர்
கோநகரி னிடைப்பொலிந்தான் குலவணிகர் கோமா
[னே

இது தரவு,

ஆங்கொருசார்,

ஆலத்தாற் றுஞ்சியவளரும்பொடிகல்லுயிர்பெறச்செய்
சீலத்தா னுயர்ஞான சம்பந்த ரெனத்துணிந்தார்
கோலக்காப் பெற்றபொரு ளின்மையாற் குனிந்தனரே
[முங்

ஆங்கொருசார்,

மழவிடையான் றிருத்தொண்டை மாறும லனுதின
கிழமையுட னியற்றிடுவா கீசராப் பாவித்தார்
உழவார மின்மையா லேரய்ந்து மயங்கினரே.

ஆங்கொருசார், [பாட்

காமருவு மழுவுடையான் களித்திடவே தமிழ்ப்
சுரமுடனே யியற்றியசீர்ச் சுந்தாராப் பாவித்தார்
சிரசின்முடி யின்மையாற் றியங்கிக் கலங்கினரே.

இவை மூன்றுந் தாழிசை-

அஃதொன்று, இது தனிச்சொல்

பெருகப் புகழைப் பீடுற வியற்றிய
முருகப்ப னென்ற மூதறி வுடையோன்
என்றே நனிபலர் துணிந்தன ரன்னோன்
பன்னெடுந் தவத்தாற் பாரினிற் றேன்றிய
சொன்னிலை பெருகிய தூயோர் புகழும்
இராம சுப்பிர மணியனென் றுரைக்கும்
சீர்சால் கலைஞன் கூர்மதி யுடையன்
எங்க ளன்ப னினிதுரை யாளன்
பராவுதொல் குணத்தன் பாடியுதவினன்
சேயுயர் மயூர கிரியுலா
மாயிரு ஞால மகிழ்ந்துபோற் றிடவே

இது சுரிதகம்

## கண்டனூர், திரு தே அரு சித சரு
## இராமநாதன்செட்டியாரவர்கள்

என்று மிளைய வெழின்முருக
வினைத்தா ளேத்து மெண்ணத்தான்
என்றுந் தமிழின் சுவைநுகர்வா
னிராம சுப்பிர மணியென்போன்
என்றும் புலவர் களிகூர
விசைத்தான் மயூர கிரியினுலா
என்று மதியு முள்ளளவு
மிசையோ டிலங்கி வாழியவே.

புரிசை திரு, சு. முருகேச முதலியாரவர்கள்

வானவர்க் கன்றளவில் தானவர்கள் செய்தசிறை
மாற்றியுயர் வாழ்வு தருவேள்
மானவர்கள் போற்றமயில் மலைதனில் வந்தவல
மாண்பினைப் பாடி மகிழ்வரன்
ஞானவர்க் கத்தவரு நன்னூற் படிப்பின்று
நன்றுநன் றென்று புகழ
மாநகர்ச் செல்வநல கோநகர்த் தனவணிக
இராமசுப் பிரமணிய னே.

---

புகலூர் தமிழறிஞர் திரு, அ. கணபதிஐயா அவர்கள்

சீர்மலி வணிக மாபெருங் குலத்துச்
செம்மலாந் திருமுரு கப்பப்
பேர்பெறு மறிஞர் பெற்றநற் றவத்துப்
பிறந்துபல் கலைபயின் றுள்ள
நார்திகழ் இராம சுப்பிர மணிய
னவையறச் சுவைபல தழுவிப்
பார்புகழ் குன்றை யுலாவினைப் பகர்ந்தான்
பகலவன் விளக்குறும் பண்பாய்.

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

# மயூரகிரியுலா.

## காப்பு.

செய்ய மயூரகிரி சேர்முருகப் பெம்மாற்குத்
துய்யவுலா வோதத் துணையாமே-பையரவ
மாதங்க வண்ணத்த வன்னருளுந் தோகையடி
மாதங்க வண்ணத்த வன்.

வேலருக் கையருலா விற்குத் துணையாமே
பாலரு வாயர் பதம்.

## நூல்.

பொன்னுலகங் காக்கும் புரந்தரனும் வானவரு
மன்னு மரியயனும் வண்மையுற-வின்னதிறத்
2
திப்படிய னிவ்வணத்த னிவ்வுருவ னென்றறிந்து
செப்பும் வகையறியாச் செல்வன்கா-ணிப்புவியில்
3
முத்துடைத்தே யென்றவ்வை மூதாட்டி யார்புகழ்ந்த
தத்தையர சாள்கன்னித் தண்ணாட்டில்-வித்தகநா
4
லோங்கிவளர் சங்கமுய ரொண்கூட னன்னகரில்
தேங்குபுக ழாரவமர்ந் தேசிவனார்-பாங்குறவே
5
யங்கயற்க ணம்மை யளித்தவர சாட்சியினை
யிங்கயற்க ணுள்ளார்க ளின்பமுறப்-பொங்குபெருங்

கங்கைச் சடையைக் கரந்து கதிர்மகுடந்
துங்கமுற வேயணிந்து துள்ளுகயல்-தங்குகொடி
7
யென்ன வுயர்த்தி யிருந்தாண்ட முன்னாளில்
மன்னு தடாதகையின் வான்வயிறு-பன்னுசரு
8
வுற்றதுபோ லாக வுயர்சோம வாரத்திற்
கொற்றவர்க ணின்று குதுகலிக்க-முற்றியகால்
9
வேத முழங்கவுயர் விண்ணவரு மண்ணவரு
மேதமற்ற தென்ன வெழுந்தவன்காண்-சோதிமணிச்
10
சொக்கலிங்க னாருளுந் தூவேல் வளைசெண்டு
மிக்கதெனப் பெற்ற விமலன்காண்-தக்கவடி
11
வேலைக் கடல்சுவற விட்டபெரு மான்முத்து
மாலை யளித்த மகபதியின்-கோலமுடி
12
சிந்த வளையெறிந்த செல்வன் மகமேரு
நந்து நிதிபெறவே நற்செண்டை-யுந்தியவன்
13
கோழியையும் பாடியதன் குஞ்சையும்பா டேனென்ற
வாழியபொய் யாமொழியை வாழ்விக்கத்-தோழமை
14 [யால்
வெங்கா னகநடுவன் வேடுவனாப் போந்தருளி
யங்கார்விற் பன்னனளி யச்சமுற-விங்காரு
15 [போலுஞ்
முட்டையையும் பாடுகென முன்னவன்சொல் பொன்
கிட்டவுயர் வாசகத்தைச் சேர்த்தவன்காண்-மட்ட
[விழுங்

கொன்றை மலர்த்தாமக் கோவுக் குயர்பிரம
மன்று மொழிந்த வமலன்கரண்-துன்றியசீர்
17
வெள்ளிக் கிரியான் விளங்குமுமை யம்மையினைத்
தெள்ளியிரு கூருக்கிச் சேரோருகூ-றுள்ளியே
18
வாமபா கத்தமைத்து மற்றொருகூற் றையொருசீர்ச்
சேமக் குழவியாச் செய்தருளி-யாமவற்கு
19
ஞானசத்தி யைமனத்து ணல்கியிச் சைகிரியை
யானசத்தி யும்படைய தாவீந்து-வானக்
20
கயிலை வரையிற் கருது வடபா
லயிலார்கற் கோயி லமைத்து-மயிலொன்றை
21
யீந்து கிருத்தியங்க ளீரிரண்ட னேடொன்று
தேர்ந்துமுறை செய்யச் செலவிடுத்தான்-போந்து
22 [முறை
செய்யுகாட் பூவுலகிற் சீரார்காஞ் சீபுரத்தி
லையனு ரும்மஞ்ஞை யாகவெனத்-தொய்யலுடன்
23
சிங்கன் பதுமன் றிறற்று ரகனென்னு
மிங்குமுடை யார்மூவ ரேத்தவே-துங்கமுறச்
24
செய்சூர னற்றவத்தைச் செந்தா மரையயனும்
மையார்பாம் புப்பாயற் பண்ணவனு-மையூர்தி
25
யேறு மயிலுக் கியம்பிடவே யம்மயிலும்
வீறுகொண்டு சென்று விமானமொன்று-தேறியெடுத்

தந்நால் வரையு மழைத்து வருகவென
முன்னுக வேவி முகமலர்ந்து-சொன்னல்வர்
27
வந்தவுட னன்னவரை மாகணத்திற் சேர்த்தவரின்
பந்தமறுத் தின்பமுறப் பாலித்துச்—சிந்தைமகிழ்ந்
28
தேயுநா ளோர்நாளி லிந்திரனும் வானவருந்
தூயவன வாகனனுந் தொல்லாழி-மாயவனும்
29
வந்து குகனை வணங்கி யினிதிருந்தா
ரந்தநாட் சூரனடைந் தம்மயிலை-முந்துநாள்
30
பங்கயங்கா ணுது பரமனடி கட்குவிழிப்
பங்கயத்தை யர்ச்சித்த பண்புமிகு-சங்கையனல்
31
சிட்டித் தொழில்செய் திசைமுகனு லேயுற்ற
நட்டத்தா லேபகைமை நண்ணியே-முட்டத்தான்
32
வாகனமும் வேதனூர் வாலனமு மும்மையலர்
சாகசத்தாற் சொற்றவெனச் சாற்றவே-வேகமாச்
33
சென்று கலுழனையுந் திண்ணனத்தை யும்பொருது
கொன்று விழுங்கிவரக் கூர்வேலா-னன்றுசெய்தாய்
34
பூவுலகஞ் சென்றங்கண் பொன்னுட ரேமுதலா
யாவுலகும் போற்று மியல்மிகுசீர்த்-தேவசிவன்
35
சிந்தை மகிழுந் திருப்புத்தூ ரின்குணபா
லந்த முறுமரசா ரண்ணியத்தில்-வந்துவரை

யாகக் கிடக்கவென வண்ண லருள்புரிய
நாக மயூரமா நண்ணுமதில்-யோகம்
37
புரியு மடியார் புகழ வயனு
மரியு மறியாத வண்ணல்-புரிவேணி
38
யீசனுதற் கண்ணி லெழுபொறிக ளோராறும்
வீசுகா லக்கினியால் விண்ணீரால்-தேசுமிகுந்
39
துற்ற சரவணத்தி லோராறு தீப்பேறிய.
முற்றிய வாறு முதல்வனு-மற்றுமுயர்
40
காழி நகரிற் கவுணியற்கு ஞானப்பால்
தாழி யளித்தநற் றுயனைந்து-வாழியவென்
41
றோதி யுருவாறு மொன்றுகச் சேர்த்தணைக்கக்
காத லுறுமடியர் கண்களிப்பச்-சோதித்
42
திருமுகங்க ளாறுந் திகழ்காமீ ராறு
மருவ வுமைமகிழ வந்தோன்-கருணையே
43
சீர்மேனி யானுன் றிகடோ மரங்கொடிவாள்
போர்குலிச மம்பு புகழ்மிகவே-யாரங்கு
44
சம்மணிநற் றமரையுந் தண்டம்வில் வன்மழுவே
லம்மவிவை யாயுதமே யாவுடையான்-மும்மை
45
மலநீக்கு வான்சேவல் வான்கொடியாள் வள்ளி
நலமாக்குந் தெய்வவுவா னரிப்-பலவாகு

விந்திரற்கு விச்சுவகல் லின்னுருவங் காட்டியவன்
றந்தமகா மண்டபத்துத் தானிருந்து-முந்துமவன்
47
செய்மஞ் சனமாடுந் தேவசே னைபதியான்
கைகளீ ராறுறுநங் கண்ணுதலான்-வெய்யசூர்
48
மேன்மை யுறவவனை வேலா லிருபிளவாம்
பான்மை யருளித்திண் பாதியுரு-வான்மயிலும்
49
பாதியுருச் சேவலுமாம் பண்பருளி யம்மயிலை
போதுமுயர் வாகனமா யூர்ந்தங்கண்-மாதுவசஞ்
50
சேவ லெனவுயர்த்துஞ் செல்வ னடியவருக்
காவ லுடனருள்செ யண்ணல்காண்-தேவ
51
ராசு பெறுதெய்வ யானை யணைந்தோன்
பிரசச்சிந் தூரத்தார்ப் பெம்மான்-கரடமிகு
52
வள்ள லுதவிசெய வள்ளி யினைமணந்தோன்
கள்ளார்பூ வேங்கைக் கடிதருவாய்—மள்ளர்
53
மருள வுருக்கரந்தோன் வானோ ரிடுக்கண்
வெருள வருள்செய் விமல—னருளினாற்
54
கந்தபுரா ணம்பாடுங் கச்சியப்ப தேசிகற்கு
முந்து மடியெடுத்து முன்னருளி-யந்தவுயர்
55
நூலையரங் கேற்றுகா னுண்புலவர் சொல்வழுவை
வாலறிவ னாகவவை வந்தவர்கள்-சீலமுட

ளெப்பும்வண் ணம்மருளு மொப்பி றனிமுதல்வன்
செப்புதிறற் ருடகையைத் திண்கரனை-யிப்புவியி

57

லேழு மாத்தை யியல்பகனை நீலியினை
வாழு விராதனை வாலியைச்-சூழுமுடி

58

பத்துடையா னைத்தடிந்த பண்பன் மருகனமர்
நத்து மெழிற்புயங்கொ ணல்லோன்வண்-சித்தமுறு

59

கார்மருவு சோலைசூழ் காழிக் கவுணியரின்
சீர்மருவு செல்வக் குலஞ்சிறப்ப-வேர்மருவு

60

சம்பந்த ணுதித்துச் சைவசம யம்வளா
வெம்பந்த மோட வியன்றமிழ்ப்பா-சம்படியிற்

61

சாத்துந் தகைமையினன் தண்கூடற் கூனாச
னேத்துதிரு நீறணிய வெய்திளேன்-சீர்த்தி

62

யருண கிரியா ரணிபுகழைப் பெற்றுக்
கருணை புரியுங் கடவுள்-வருணன்ருன்

63

பெற்று வளர்த்த பெருமானீ ராறுகர
முற்ற பெருமா னுயர்பெருமான்-கற்றைச்

64

சடையா னருள்பெருமான் தைய விருவ
ருடையா னிலைவடிவா மொள்வேற்-படையான்ருள்

65

வேதச் சிலம்பினன் வெற்றி மயூரமெனுஞ்
சீதச் சிலம்பினன் றேவரெலா-மோதுபல

மாகுவான் வாச வணிநீப வாகுவான்
வாகுவான் பாந்தளூறு மாமயிலான்-நாகத்
67
திறைவ னொருவே விருபன்னி முப்பு
வரைபனல் வரய னனுசன்-பரையாகத்
68
தைந்தூ முகன்மதலே யாறு முகங்கடவுள்
சந்தநிறை யேழிசையுந் தானருள்வான்-வந்தெட்டுத்
69
திக்குந் தொழுபுத்தேள் செல்வமொன்ப தும்மீவோன்
சொக்கவங்கம் பத்துடைய தூயோன்மா-நக்கர்
70
பதினொருவர் போற்றவளர் பண்பனடி யார்க்குக்
கதிதருநற் பன்னிரண்டு கண்ணன்-விதிநா
71
லுரைத்தமுறை யேமீன வுத்தரத்திற் சேறு
பொறித்தகொடி யேற்றிப் புலவ—னருத்தமுடன்
72
கொள்ளுதிரு நாளிற் குரைகழல்க ளேத்துவிரேல்
விள்ளு முமது வினையென்னப்-பள்ளிதொறும்
73
விட்ட திருமுகமே மேவுந் திருநாளிற்
செட்டியுலாத் தெய்வத் திருநாளிற்-கிட்டவந்து
74
வேதிக்கு மானுடரை மேனிலையி லுய்வித்து
வேதியா மானவரை வேதிக்குந்-தீதில்
75
திருநாளி லும்பர் திருமகுடப் பத்தி
திறைநாளி லேழுமுந் நீரு-முறையே

சிகிவரைநற் பாக்கத்துச் சேர்ந்ததா மென்ன
மிகவொலிசெய் காளில் விளம்புக்-தகவுடைய
77
மாமஞ்ஞை யேமுதலாம் வாகனங்கள் மேற்பவனி
யேம முறவருநல் லின்னுளிற்-காமன்

## திருப்பள்ளியெழுச்சி

பெறுதெய்வ யானையினைப் பேருலக மேத்த
வருவள்ளி மானை மருவி-யருணை
79
னெழுமுன்னே யன்ப ரிசைமறையி னார்ப்பும்
பழுதிலா வீணையொலிப் பண்பும்-விழவறியச்
80
சாற்று முரசொலியுஞ் சங்கவொலி யும்மடியர்
போற்றுமுரு காவொலியும் பொங்கியெழக்-கூற்றினை
81 [முன்
காதினன் மைந்தன் கடுகத் துயிலினைநீத்
தேதினன் மெய்ப்பொருளை யேத்தன்பர்-தீதறவே

## திருமஞ்சனமாடல்

பெற்றுப் பெருமையுறப் பேருலாக் கொள்ளநினைந்
துற்றவா னைந்து முயர்பாலு-முற்று
83
ததியும் பிரசமுஞ் சந்தனமு நீறும்
விதிநூற் கனித்தொகையு மேலரங்-கதியுதவுங்
84
தண்பனிநீ ரும்மிறைவன் சார்சரவ ணப்பொய்கை
வண்பனி நீரு மகிழ்ந்தாடிப்-பண்புமிகு
85
மாதிசைவர் நீடுமுய ராகமத்தி லேயரனு
ரோதிசைவிற் செய்பூசை யுட்கொண்டு-கோதிலுயர்

திருவாபரணம் புனைந்தருளுதல்

பொற்றூச தார்த்துப் புறங்கச்சு வீக்கியிரு
ளுற்றதென வோது முயர்குழலை-முற்றுமறைத்
87
தம்பொன் மகுட மணிந்து கதிர்முழுது
மிப்பரினில் வந்தவென வெண்ணவே-கம்படரும்
88
வச்சிரநற் றோடு வளர்ந்திலங்க நன்னுதலி
னிச்ச முயர்திரு நீறணிந்து-மெச்சுமடைக்
89
காயருந்திக் கந்தரத்துக் கண்ட சரமணிந்து
மேயமுத்து மாலை விளங்கவொளி-நாயகமாஞ்
90
செம்பருதி யென்னத் திகழ்மகரி நற்பதக்கஞ்
சம்பருளு மக்கமணி தான்மலைந்து-நம்பரன்றன்
91
தோளிடைநற் கேயூரஞ் சூட்டிவலி யாகமிசை
வாளொளிசெய்மின்னல்வளைந்ததெனக்-கோளறுநூல்
92
சூட்டியரை ஞாணரையிற் றோன்ற மணிக்கடகம்
பூட்டிநவ கோளும் பொலன்கழல்கள்—வேட்டதனைப்
93
பற்றியதே போலப் பகரு நவமணிகள்
முற்றொளிசெய் நூபுரமு முன்னணிந்து-கொற்றப்
94
பிரணவத்தை யன்பர் பெரிது நினைந்து
சரண மெனத்துதிக்கத் தங்கும்-பெருநல்வான்
95
வில்லென்ன வம்பொன் வியன்றிரு வாசியுற
மல்லர் கொடிதழுவு மரவுரத்துச்—சொல்லரிய

கந்தங் கமழுங் களபகத் தூரியணிக்
தந்தமிலா மேனி யழகதனை-முந்து

97

சுருதி மிகத்தேடித் தோன்றரியான் சோதிப்
பருதிகிலைக் கண்ணுடி பார்த்து-முருகுவளர்

98

மல்லிகை முல்லை மருக்கொழுந்தி ஞற்றெடுத்த
பல்லியலார் கோதை படர்ந்திலங்க-மெல்லியலார்

99

இன்ன லுறமயின்மீ தேறி முரசொலிப்பப்
பன்னு முழவதிரப் பண்புடனே—நன்னயமார்

100

சங்கந் தொனிப்பவுயர் தக்கை குழல்பேரி
துங்க முழவுதிண்டி தூரியங்கள்-பொங்கவிசை

101

நாக சுரமதிர நாரதருந் தும்புருவும்
வேகவிசை பாடவரை வெற்முலையா-ராகத்

102

தெழுகளை நீங்க விருகவரி வீசப்
பழுதி லடியார் பணிய—முழுது

103

மலக்கணற வந்திக்கு மன்பர் பவத்தை
விலக்குவபோ லாலவட்டம் வீசத்—துலக்குமுறை

104

வல்லோர் மறைமுழங்க வான்புறவம் வந்தோனுங்
கல்லேகற் றேணியெனக் கண்டோனு-நல்லநிதி

105

யாற்றிலிட்டுச் சம்பருளா லாரூர்க் குளத்திலெடுத்
தேற்றபெரு மானு மிறைசிலனைத்-தோற்று

நரிபரியே யாக்க நடத்தும் பிரானு
முறையே செய் நூல்கள் முழங்கக்-குறைவின்றி
107
யாண்ட வருணகிரி யண்ண றிருப்புகழுங்
காண்டகுசீ ரேர்ங்கிக் கறங்கவருள்-வேண்டடியார்
108
பல்லாண்டு கூறப் பாந்து சயசயவென்
றல்லாண்ட கூந்த லணிமுலையார்-மல்லாண்ட
109
திண்டோள்கள் கொள்ளுந் திருட்டிபரி காரமா
வெண்டோட்டுக் கைகள் விரித்துப்பொன்-தண்தட்டி
110
லாலத்தி சுற்ற வணிமிகுவா யில்கடந்து
கோலப்பூம் பட்டுக் குடைநிழற்றச்-சீலத்தேர்
111
விண்ணவர்க ளோந்தருவின் விண்பூ மழைபொழிய
மண்ணவர்க டன்னும வாழ்த்தெடுப்பப்-பண்ணமருந்
112
தெய்வானை வள்ளி திகழ வருள்மாரி
பெய்வான நாதன் பெரிதேறி-மைவான

உடன்வருந்தேவர்கள்

வண்ணன் களதமு மாதேவ னேறுமழை
வண்ண னுவணமு மாலுந்திப்-பண்ணவனு
114
ரன்னமுமு ருத்திரர்க ளாறைவ ரேறுமொளி
பன்னிருவர் யந்திரமும் பானிலா-மன்னிவளர்
115
மானமு மட்டவசு வானிருடி யோரெழுவ
ரான விவர்வருகல் லாதனமு-மானமிகு

காரி யிருவர் களிறும் புரோகதியும்
வீரரோன்பான் றேருமுயர் விண்ணிறைவன்-வார
117 [ணமுந்
திக்கெட்டுங் காப்போர் திகழு நரர்விலங்கு
மிக்குயருங் கோள்கள் விளங்கரியுந்-தக்கசீ
118
ரேழு மடவா ரிலங்கு விலங்குபுள்ளும்
யாழின் முரியருளு மண்ணலூர்-மாழைமணி
119
முத்தூர்தி யும்மாமூர் முன்னவனின் கேடகமு
மத்தனன்ப னேறும்வெள் ளானையுஞ்-சித்தப்
120
பெருந்துறையிற் கோயிலமை பெம்மானி னேறு
மரன்றோழன் கஞ்சிகையு மாரூர்ப்-பரனையிராத்
121 [தொகையு
தூதுவிட்ட பெம்மானார் சொல்லுந்தொண் டத்
ளோதிவைத்த நாயன்மா ரூர்தியுங்-கோதறுநற்
122
சீர்ப்புகழைக் கந்தனடி சேர்த்தபிரான் கேடகமுங்
கூர்ப்புக் குமர குருபரனி—னார்ப்பறுகுங்
123
காம னவந்திகையுங் காந்தருவர் பைசாசர்
சேமவிஞ்சை யர்யோகர் சித்தசுரர்-மாமகரம்
124
பூதர் கருடர் புகழ்சா ரணரியக்க
ரேதமில்விண் வாச ரியலுரகர்-மாதேவ
125
ரேமமுறு கோக்க ளிசைதைத் தியர்நிருத
ராமிவரும் பூவிற்பா லாழியெனச்—சேமநிதி

யாகுந் திருநீ றணிந்துவரு தொண்டரும்
வாகு மிகுபுயத்து மாறனும்வண்—ணீகைமிகு
127
சோழனுஞ் சேரனுஞ் சொல்லுமறை யோர்களுங்
கோழிப் பதாகைக் குமரனுரு-தோழமையால்
128
தீண்டும் பெரும்பேறு செய்தமறை வாணரு
மாண்ட லுறவரமா வண்வடிவே-லாண்டகை

திருச்சின்னம்

வந்திப் பவரிடர்கள் மாற்றத்தே ரூர்ந்துவந்தா
னந்திப் பிறையணியு மண்ணற்கு-முந்துநாள்
130
ஞானப் பொருள்விளக்கு நங்குகன்வந் தான்றேவ
சேனைக் கிறைவந்தான் செய்யகான்—மானுக்
131
கிறைவந்தான் காழி யினில்வந்தான் வந்தான்
கறைமேனிக் கைமுகத்தான் றம்பி-முறையேவந்
132
தான்மூகை நீக்குஞ் சரவணப வன்வந்தா
னான்முகனு மாலு நயந்தறியா-வானவன்செவ்
133
வேள்வந்தா னென்ன வியன்றிருச்சின் னம்மார்ப்ப
வாள்விழியா ராட வருகுழுவுக்-கேழ்கடலு

குழாங்கள்

மொப்பில்லை யென்னவுல குய்யமறு கெய்தினனால்
செப்புகலை விஞ்சையரின் தேவியரு-மைப்படியு
135
நாட்டத்துக் கந்தருவ நல்லாருங் கின்னரரி
னாட்டியரு நாக ரரிவையருங்-கோட்டசுரர்

கன்னியருங் கிம்புருடர் கன்னியருஞ் சாரணரின்
கன்னியரும் பூதலத்துக் கன்னியரு-மன்னுமயில்
137
தாரகற்செற் றோனைத் தாங்கத் தவஞ்செய்த
சீரகத்தைக் கண்டுதெரி சிப்பமென-வோரகத்தே
138
பெண்ணி யடைமயில்க ளென்ன முருகனெழில்
வண்மை யறிய வருமடவார்-கண்ணுமனை
139
முன்றிலில்மா டத்தில் முகப்பில்திட் டையிற்செய்
குன்றினிற் சாலத்திற் கோபுரத்தில்-மன்றில்
140
பலாப்பழத்தி லீமொய்க்கும் பான்மையே போல
வுலாப்போது மண்ண லுலாத்தி-லுலாப்போதுங்
141
தெய்வத் திருவருளாஞ் செந்தேனை வான்கயலா
மைவைத் தகன்றவிழி வண்டுகளா-லுய்யவுண்பார்
142
வானோ ரிறைவன் மகளை வழுத்துவா
ரேனையோர் பெண்ணை யிறைஞ்சுவார்-வானநீர்க்
143
கங்கை மதலைதோள் கண்டு தமதுவரைக்
கொங்கையிணை நோக்கிக் குழைவரகம்-பங்குபரும்
144
வள்ளிதெய்வ நாயகியை மாமயிலை யன்பரெலா
முள்ளுமீ ராறுகணை யொள்வேலை-வெள்ளைநீ
145
றேய்ந்த திருநுதலை யின்முகத்தைப் புன்முறுவல்
வாய்ந்த மலர்வாயை வாகுவினை-யாய்ந்தமராத்

தாமத்தை யாயுதங்க டங்கு மலர்க்கரத்தை
நாமத் திருவடியை நண்ணுழிலைக்-கோமகனைக்
147
கண்ணார நோக்கிக் கசிந்து வியந்துவப்பர்
அண்ணாந்து நோக்கி யழகென்பார்-மண்ணாளுஞ்
148
சேயோ னுவக்குந் திருத்தே ருலாக்காணா
மேயோமே யெங்கடவ மேலென்பர்-நேயமிகு
149
காதூர்தி யென்னவே கண்களோ ராயிரம்பெற்
றூரவரே மேலா மமரரென்பர்-வீரமயி
150
லேறுவாற் பார்த்துயிர்த் தெம்மையணை வீரென்று
கூறுவார் மால்கொண்டு தூன்றுவர்-சேறுமிகு
151
மாலை யணியென்பார் மாலை யழியென்பார்
வாலைப் பெருமானே வாவென்பார்-சீலக்
152
கொடிக ளிருவர் குலவு பெருமான்
படியருள்வ ரென்று பணிவா-ரடிகளுக்
153
கெங்கணீர் மஞ்சனமோ வெந்தொடிகள் பூசனைக்குத்
தங்கு திருப்பள்ளித் தாமமோ-விங்குறையுங்
154
காம னெமைவருத்தல் காணுமிறை வாவென்பார்
யாமமுற்று மெம்மிடர்நீக் காயென்பார்-சேமத்
155
துகிலிழப்பார் மாரன் றொடுகணையாற் றுன்ப
மகமுறவே யொன்று மறியார்-மிகவெயர்வை

சிந்துவார் கொங்கை திரண்டுவிம்ம வஞ்சியிடை
பந்தனைத் தாங்காது பாரத்தால்-மந்திரமுண்

157

புல்லோனைப் போலப் புரள வருந்துவார்
நல்லோனே யெம்முடைய நாணையழித்-தில்லிருவா

158

வும்முடைய நாணை யுவந்தாகத் தேயணிந்நீர்
வெம்மலையிற் செண்டை விரட்டினீ-ரெம்முலையிற்

159

செண்டை விரட்டுவீர் செவ்வாய் திறந்தொருகா
லண்டைவரு வேனென் றறைந்திட-ரெண்டிசைக்கு

160

மிக்கான செம்மலே வேலாயென் பாருருவில்
மிக்கா ரிவருள் விளங்கொருத்தி-தக்க

பேதை

பருவச் சிறுபேதை பார்மகன்றன் பாண
மருவப் பெறுத மடமா-னுருவினி

162

லொப்பற்ற காளையர்க ளுள்ளமுரு மாமயிலாள்
செப்பழகோர் தெய்வவுருக் கொண்டென்ன-விப்புவியி

163

லேய்ந்ததிருப் பாவை யினியமல ரோதிமநீர்
வாய்ந்த வளைமருவா வண்டரள-மாய்ந்தமலர்

164

பூத்தறியா வஞ்சி புகழு மணிச்சுரங்கம்
வாய்த்தறி யாதவிள மாணிக்க-மேத்தருசீர்க்

165

கொம்பரூத் தேறல் குறைவில் மருக்கொழுந்
தம்பரு மாரனெடா வங்கன்னல்-வம்பருச்

N37



சோலை பொதியமலை தோன்று முயர்தென்றல்
வேலையிடைத் தோன்றுத விண்ணமுதம்-பாலையுணப்
167 [ணைப்பா
பாவையினைத் தோன்றுப் பயோதரத்திற் சேர்த்த
ளாவலுடன் சித்திரவா ழைக்கனியைத்-தாவறுசீர்
168
வன்னிக்குக் காட்டி மகிழ்ந்துண்ணச் சொல்லுவாள்
துன்னு புளகத்துத் தோன்றுருவைத்-தன்னுடனே
169
சிற்றி லமைத்துத் தெருவில் விளையாட
வுற்றனை வாயென் றுரைசெய்வாள்-கொற்றமுலைப்
170
பாலருந்து கின்றதிலை பாவைமருந் தூட்டினுற்
பாலருந்து மென்று பகருவாள்-ஞாலமிசைக்
171
கூர்த்த மதியிலார் கொண்டுசெயு நற்றொழில்போ
லார்த்து முடியா வளகத்தாள்-தீர்த்தத்துப்
172
பங்கயங்க ளென்னப் பகரு மிணைவிழியாள்
திங்களென வோதுந் திருமுகத்தாள்-தங்குகுழ
173
லென்ன விசைக்கு மிளமழலை வாயினாள்
துன்னுவித்தில் மாமரங்கள் தோக்கதுபோல்-முன்ன
174 [நெடு
மால்செவியி னுள்ளே மறைந்தமது கைடவர்போல்
வாலியெய்ய ராமன் மறைந்ததுபோல்-வேலை
175
யொளித்தமை நாகம்போ லுமையிறைவன் வேணி
யொளித்த பகீரதிபோ லும்பர்-களிக்குமிறை

78293

யம்போ ருகத்தொளித்த வாகண் டலன்போல
மொய்ம்பெறத் தோன்று முலையினுள்-பைம்பொழில்
177 [வாய்

மன்னுகொடிப் பந்தர் மணப்பந்த ராவாவி
யுன்னுமரக் காம்ப லுயர்தீயாத்-தன்னுடைய

178

கிள்ளையே வேட்டற் கிரியைசெயு மந்தணராக்
கள்ளையே நெய்யாக் கடிவிரவு-வெள்ளைநிறப்

179

புன்னை யரும்பே பொரியாகப் பொற்பாவைக்
குன்னுமணஞ் செய்யு முயர்காலை-மன்னுவேல்

180

வேந்தன்வந் தான்றேவ வேழ முவந்தணையும்
காந்தன்வந் தானென்னுங் காகளமுந்-தாந்தமெனக்

181

கிண்ணெலிசெய் பல்லியமுங் கேட்டு முலைத்தாயர்
விண்ணவனைச்சேவிக்கமேவினரால்-புண்ணியத்தாள்

182

தாயர் தொழப்பார்த்துத் தானுந் தொழுதிறைஞ்சி
யாயவிவர் சிற்றி லடைந்தனரால்-தூயவென

183

சிற்றிற் சிறுசோ றுகந்தோ சிறியனேன்
கற்றகழற் காயாடல் கற்கவோ-சொற்றகைய

184

வம்மா னிறைவ னருளு மணிமுருக
னம்மான் மகள்கணவ னாறுமுகப்-பெம்மானிங்

185

கேய துரைமி னெனப்புகன்றாள் பேதையுயர்
தாய ரதுகேட்டுத் தையலே-யாயவிதென்

வேதியர்க ளாகமமா மெய்ந்நூல் முறையேசெய்
சோதிலமு துண்ணுங் குமரன்றான்-தீதறுகின்
187
சில்லடிசிற் காகவிங்கு சேருவனோ முத்தொழில்செய்
வல்ல பெருமான் மறைப்பெருமான்-சொல்லுகழற்
188
காயாட விங்கண் கடிதி லடைவனோ
வாயிவ்வா றோத வணங்கும்பின்-மேயதற்குக்
189
காரணமே தென்னக் கடியுலாப் போந்தானென்
றாமுடை யாய ரறைந்தனரால்-பேரமுதம்
190
தாவி றிருத்தேரிற் றங்கு மிளையோனை
யாவ னெனக்கேட்டா ளன்னைமார்-தேவாது
191
சேனை யிறையென்றார் தெய்வச் சிலம்பைவள்ளி
மானையெவ ரென்றாள் மனையென்றார்-வானயிலை
192
யென்னென்றாள் கூர்வடிவே லென்றார் சிகாவளத்தை
யென்னென்றாள் மாமயிலென் றேத்தினா-ரன்னதனைத்
193
தத்தையுடன் வைத்துவிளை யாடத் தகவுடைய
வத்தனிடம் வாங்கி யளியுமென்றாள்-கர்த்தனுமவ்
194
வாகனமா யூருமிள மாமயிலை யீவானோ
வேகனையே யென்ன விருகணீர்-மாகதிர்கள்
195
வீசுந் தாளம்போல் விட்டா ளிறைவனுமவ்
வாசி றெருவகன்றா னங்கொருத்தி-பேசும்

பேதும்பை

பருவப் பெதும்பையுயர் பார்மகன்றன் பாண
மருவ நினைக்கு மடமா-னுருவத்துச்
197
செந்தா மரைத்திருவின் செவ்வி வளரன்னம்
பைந்தா துகாத பருமரும்பு-கந்தரங்கண்
198
டாடாத மஞ்ஞை யழையாத கோகிலம்
வாடாத மன்மதனால் வாசிப்பாள்-கோடாத
199
வாய்சரவ ணத்திலுய ரண்ணலுருக் கூட்டுதல்போ
லேய முடித்த விருங்குழலாள்-தூயநுதல்
200
வெண்பிறையே யென்ன விளங்குவாள் சேல்விழிகள்
தண்சுரும்பே யென்னுந் தகைமையாள்-வெண்சங்க
201 [செய்
மென்னுமணி கண்டத்தா ளென்பிளைப்பெண் ணநச்
மன்னன்கைத் தாளம்போல் வான்கமுகிற்-றுன்னு
202 [மிளங்
காயைப்போற்புற்றினுறுகட்செவியைப் போற்சிறிது
தூயமுகங் காட்டுந் துணைமுலையா-ளாயவொளி
203
வெங்கதிர்க்கு மில்லையென மேவுமிள மூரலாள்
செங்கைகள்மாந்தளிர்போற்செம்மையாள்-துங்கமண
204 [ம்
வேட்டுத் தனதுகிளி மென்மணத்தை நோக்கியுள
வாட்ட மடைந்து வருந்துவா-ளீட்டமாய்
205
வண்டு பயிலு மலர்முகத்தாள் மாளிகையில்
தொண்டியற்றமன் னுமுயர்தோழியரோ-டண்டர்பதி

நந்துமுயர் மாடத்து நாடம் மனைகழங்கு
பந்து பயில்காலை பண்புடனே-சந்தநிறை

207
யோவியக் தீட்டு மொருவன் வரக்கரிய
காவியங் கண்ணி கழறுவா—ளோவியனே

208
தோகை வரைவளருந் தோன்ற றிருவுருவை
மாசயி லரயன் மகனுருவை-வாகையுறு

209
சேவற் கொடியானைச் சீரார் படத்துவரைந்
தாவ லுறுமெற் றுளியென்றாள்-மாவலனு

210
மிப்படிய னிவ்வடிவ னிக்குணத்த னென்றெழுதிச்
செப்பமுடி யாதான் றிருவுருவை-மெய்ப்புலவ

211
நாம விறைவனை நாகங் களுக்கிறையை
மாமறையாற் றேடரிய மன்னவனை-யாபெழுத

212
வல்லோமா வாயினுமென் மாதே யுனக்கவனை
நல்லார்கள் சொல்லுவபோ னட்டியே-யொல்லையினி

213
லீவே னெனவுரைத் தெம்பெருமா னல்லுருவை
யோவியமாத் தீட்டி யுவந்தளித்தான்-தேவியரை

214
யாரென்றாள் மானி னமரர் பெருமானின்
சீருயரு மச்கள் தெரியென்றான்-நாரியரைப்

215
பார்த்துப் பெருமூச் செறிந்துபரன் பக்கத்தே
சேர்த்தவ ளையுமெழுதச் செப்பினாள்-கூர்த்தமதி

கொண்ட கரவலவன் கூறுவான் கந்தனடி
யண்டவெல் லோர்க்குமெளி தாகுமோ-பண்டைநா
217
ளில்லா வழியி லிவனெழுதி னானென்றே
யெல்லாரு மென்னை யிகழுவார்-நல்லாய்கே
218
ளின்றிறைவன் போது மினியவுலாக் காட்சியினி
னன்றுசினைக் கண்டனனே னானையவ்வா-றென்றெ
219 [ழுதி
யீவே னெனவுரைத் தேகினா னேவியன்
மாவேள் மணித்தே ருடன்வந்தான்-பரவைமறு
220
கேகிச் சகிகளுட னெம்பெருமா னையிறைஞ்சிப்
பாகனைய சொல்லுடையீர் பாங்கிமீர்-நாகியரோ
221
டியானு மொருத்தியா விவ்விளைஞன் பாலிருக்க
வேனாகா தென்ன வியம்பினாள்-மானமுறு
222
தோழியரு மாதே சொலுமப்பன் கரபாலி
வாழியனை யோகன் மலைநீலி-சூழுமம்மான்
223
வெண்ணெய் திருடி விளங்குமுன்னோன் மாவயிற
னண்ணலிவ னிப்பரிசுக் காகவோ-யென்னுமயல்
224
கொண்டாய் மிகவென்று கூறி யுடனகைத்தார்
வண்டாருங் கோதையொன்று மாறுரையாள்-தண்
225 [டாரா
ரும்பர் பெருமா னுயர்குமரன் சேயிளைய
நம்பன் றிருத்தேர் நடத்தினான்-கும்பமலைங்

மங்கை

தொங்கைபால் மாரன் குலவ விரும்புமெழில்
மங்கைப் பருவமட மங்கையாள்—தங்குமெழிற்
227
காளையர்க்கு மையற் கடுவாகு நோயீந்து
கூளியா னேய்தீர்க்குங் கொள்கையாள்-வாளியான்
228
போகநூல் கற்றுப் பொருளறிந்து பூரிப்பாள்
நாகிறைவன் றேளனைய நாடுவாள்—வேகமின்
229
காசினியில் வந்ததெனுங் காட்சியாள் வாசவனி
னாசிலுய ரூர்தி யளகத்தாள்-மாசிவனின்
230
வேணி வளருமதி யன்ன வியனுதலாள்
நாணி யெனும்புருவ நங்கையாள்-மாணெழில்சேர்
231
வள்ளி யினைப்பயந்த மான்விழிபோ லேயிறைவ
னுள்ள முவக்கு முயரயில்போற்-கள்ளவிழிச்
232
சாரங்கங் கொவ்வைத் தனிக்கனிச் செவ்வாயாள்
சாரங்கி யென்னமொழி சாற்றுவாள்-நீறங்கன்
233
தோன்று குழலனைய தோளினா டோகைமலை
போன்ற தனத்தினாள் பூவாளித்-தோன்றனுடல்
234
மானு மிடையினாள் வானுயரு மோடையினை
மானுமக லல்குலாள் வான்கதலி-மானுக்
235
தொடையினாள் நான்முகனின் சோதிவள ரன்ன
நடையினாள் பூஞ்சோலை நண்ணிப்-புடையினார்

சேடியர்கள் கூறத் திருவூச லேறிமணிச்
சூடகங்க ளார்ப்பத் துணைவிழிகா-தோடநுதல்
237
வேர்வை யரும்ப வியனூ புரமொலிப்பக்
கூர்விழியா ளாடிக் குதுகலித்துப்-பார்வரையான்
238
வண்மையுயர் பாங்கியா ற் கேட்டு மகிழ்காலை
திண்மையுடை வேலான் றிருத்தேரி-லண்மையுறுந்
239 [யடைந்
தொண்டர்க் கருள்புரியத் தோன்றினன் மங்கை
தண்டர்க் கரிபானை பஞ்சலித்தாள்-புண்டரிகத்
240
தாளரன் மறுகு தனைக்கடந்தான் மாமயிலாள்
வேளான் கணைபால் மிகமெலிந்தாள்-தோழியர்கள்
241
மாதுக் கரசனைய மாமயிலைக் கொண்டேகிப்
போதுப் படுக்கை புகுத்தினர்-நாதன்
242
திருமாலை வேண்டுமுயர் செம்முலையா ளூற்ற
பெருமாலை கண்டு பிதற்றி-நறுமாலை
243
வாசம் புரியுமிட மென்ன வளர்பெருமா
னேசம் புரியுமுயர் நித்தனே-யாசையினை
244
நீக்குவா வென்னு நிருமலா யென்னுமிடர்
போக்குவா யென்னும் புகழ்முலைகள்-நோக்கி
245
நெடிதுயிர்க்குந் தத்தையினை நீபோய் மயலைக்
கடிதுரைப்பா யென்னக் கழறு-முடிசோரு

மிப்படி யாகு மிவடன்னைத் தாயரடைந்
தொப்பிலான் மாலை யுனைமருவச்-செப்புவே
247
மாலை யளித்துன்னை மருவுவா ராகலினீ
மாலை யொழிக்கவென வாணுதலுஞ்-சாலவே

மடந்தை

யாழினு ளங்கொருத்தி யாயு மிழைமடந்தை
மாறில் மதவேளின் வான்கரும்பு-கூறுமதன்
249
காமச் சுவையமிர்தங் காமப் பெருஞ்செல்வ
நாமத் திருத்தணியி னற்சுனையிற்-சாமக்
250
கருங்குவளை யில்வளருங் கரமருபூக் தும்பி
பருங்கொன்றைக் காயளக பாரஞ்-சுருங்குநுதல்
251
விற்கோல மானுள் விழியாலங் காட்டினுள்
மற்கோண மெட்பூ வணத்தினுள்-சொற்பால
252
வெண்முல்லை வாயினுள் மேவுவஞ் சைக்களத்தாள்
வண்முலைகள் வல்லமெனு மாணிழையாள்-பண்மொ
253 [ழிகள்
பாலொடுதேன் கூடலாள் பாரிலிடை வஞ்சியாள்
மாலுதரங் குற்றால வாய்மையாள்-சாலவே
254
மார னுருவனைய வஞ்சியிற் காஞ்சியாள்
சீருறுமா யூரமெனுஞ் செவ்வியா-ளாரல்குல்
255
மாநாகர் கோவிலாள் வாழ்கஞ்ச னூரன்ன
சீநடையாள் சேடியினை நோக்கியே-நானிரவிற்

பஞ்சமலர்ப் பாயற் படுத்துறங்குங் காற்கனவி
லஞ்சுகின்ற வேலின ராறுமுக-மெஞ்சலிலாப்
257
பன்னிரண்டு செங்கைகள் பாரக் கதம்பமலர்
மன்னியிவண் வந்தனரால் மாசகன்று-துன்னுநீ
258
ராரென்றே னெந்தை யணிமுடியி லாரென்றார்
நீரென்றே னென்பிறப்பு நீரென்றார்-நீரேந்த
259
லூர்நாடென் றேனல் லுறவேகா டென்றுரைத்தார்
பேர்மாதே வாவென்றேன் பின்னுமவ-ரோர்மாதே
260
வாவென் றுரைசெய்தார் வானவர சம்போகந்
தாவென் றுரைத்தேனச் சண்முகனு-மாவின்று
261
சம்போகந் தாவென்று சாற்றினா ரிவ்வேளை
வெம்பாகாஞ் சொல்லாய் விழித்திட்டே-னம்பியிதற்
262
குற்ற பலனை யுரையென்றாள் சேடியுமுன்
வெற்றி மயூரமலை மேவினோன்-சொற்றகைய
263
வள்ள லுனைப்போற்ற வந்தானென் றென்கருத்தி
லுள்ளுகிறே னென்ன வுவந்திருந்தாள்-கள்ளமலர்
264
மாலையான் மாயூர மாமலையா னவ்வழியே
கோலச் சயந்தனத்துக் கூடினான்-சாலவிவ
265
ளின்று காங்குவித்தா ளீள்காமப் பித்தேறி
யொன்று மறியா துருகினாள்-தென்றல்வேள்

வில்லம்பு பட்டு மெலிந்தாண்முன் ஞட்கண்ட
நல்லகன வெண்ணி நலிந்திட்டாள்-சொல்லுவனே
267
நீங்கினுள் கந்த நிமலன் புயத்துக்கா
வேங்கின ளாறுமுக வெம்பிரா-னுங்கிருந்து
268
செவ்வேள் திருத்தேர் செலுத்தின னன்னையனேந்
திவ்வா றிரங்கு மிளமகளின்-செவ்வியறிந்
269
தாய்சேயை நோக்கி யணியா ரிருமனையை
மேயநீர் சேயை விரும்பினிரோ-வாயவிவள்
270
கைவளையில் லாதுமது கைவளைகள் மேவாதோ
மெய்வளரு மேகலையை யன்றியுமக்-கைவளரு
271
மேகலையின் ருேமகளின் மென்றுகிலல் லாதுமக்
காகுந் துகிலொன் றறியீரோ-வேகமா
272
யித்தொழிலைச்செய்யவோயிங்கணைத்தீரென்றறைந்து
தத்தைமொழி யன்னை தனதில்ல-நத்தினு

அரிவை

ளன்ன திருத்தெருவி லாரமுத மாமரிவை
பன்னுகச்சி யேகாம் பரநாதர்-மன்னிவளர்
274
சூத மரம்வளருந் தோகைக் கரகண்ட
மாதேவ னஞ்செழுத்து வாழ்வுறுப்-பாதகரி
275
னெஞ்ச மனையகரு நீள்குழலாள் சம்புகள
கஞ்சனைய கண்ணினு ணுடுமுகம்-பஞ்சமலர்ப்

பாணத்து ளொன்றனைய பண்பினு ளாடியெனக்
கரணத் தகுஞ்செங் கபோலத்தாள்-பாணத்தன்
277
வேலைவிட முண்டநாள் விண்ணோ ரினிதுண்ட
மாலமுத மொத்தசுவை வாய்மொழியா-ளாலடியன்
278
முப்பாந்து ளாக முதிர்நாண் வளைத்தநாள்
செப்புநகை யன்ன சிறுநகையா-ளப்பிலுறு
279
சங்கன்ன கண்டத்தாள் சார்கச் சணிந்துபொன்போற்
பொங்கு பசலை புகுந்துதிரண்-டங்கத்தைச்
280
சின்ன மெனவிசைக்குஞ் செம்முலையாள் சேடியர்க
ளுன்னுபலர் நிற்க வுயிர்ச்சேடி—தன்னையழைத்
281
தோங்கிய செய்குன்றி னுள்ளிருத்தி யாவலொடு
மாங்கவளை மஞ்சனநீ ராட்டியே-வீங்குவிரைச்
282
சந்தனத்தைப் பூசினுள் தன்னு பரணமெலா
மந்தமிக்கதென்னவவட்கணிந்தாள்-பைந்தொடியைக்
283
கட்டி யகமகிழ்ந்தாள் கைத்தாம்பூ லங்கொடுத்தாள்
மட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்த்தினுள்—கிட்டப்போய்
284
வஞ்சியே யென்றன் மனத்தில் விளைகருத்தைப்
பஞ்சாக நான்படும் பாடதனைக்—கஞ்சமுக
285
மாறுடையான் பாலே யறைவா யெனவுரைத்தாள்
மாறுசெரலரச் சேடியுமம் மங்கையைப்பார்த்-தாறு
[முகப்

பெம்மான்மா யோன்மருகன் பேருலா நாளையிவ்வா
றம்மவரு வானென் றறைந்திட்டாள்-கொம்மைமுலை
287
யரங்கதுகேட் டல்குல்வே ளாசை யினும்விரிய
வீங்குமுலை விண்ணடைய மெய்ம்மயிர்க்கூச்-சோங்கி
288 [யே
மன்னிய காமம் வளர்காலை மாலைவர
வென்னை மறலிநிற மிந்நிறமோ-மன்னுமவ
289
னென்ற னுயிர்குடிக்க விங்கு பொருந்தினனே
குன்றவேள் சிந்தை குடியிருக்கத்-தென்றல்வேள்
290
வில்லம்பென் னகத்தில் மேவுவதே னென்றுரைப்பாள்
வல்லம் புலியின் வளரொளியை-நல்லம்பாச்
291
சுட்டதெனக் கூறுவாள் தோன்ற னுதலழலாற்
சுட்டமதன் வாளி தொடுப்பதெனே-விட்டப்
292
பொதிய மலைபிறந்த பூங்காற்றென் மேனி
யுதிர மருந்துவதே னும்பர்-பதியினிட
293 [சேடியரை
மென்னிலைமை சென்றுரைப்பீ ரென்றுரைப்பாள்
யின்னலைய துன்பத் திளையாளுங்-கொன்னெடுவேல்
294
வேந்தன் றனதடியே மெய்ப்புணையாக் கொண்டிரவா
மேந்தற் கடலை யிகழ்ந்திகழ்ந்து-நீந்தினாள்
295
காலை யெழுந்து கடன்கள் முடித்திறைவன்
மாலை விரும்பி மறுகடைந்தாள்-வேலையன்

நாடுதிருத் தேர்கண்டு நாளைவரு மென்றுசொன்ன
சேடி யினைநினைத்துச் சேவித்தா-ளாடினுள்
297
பாடினு ளண்ணலிரு பாதபங்க யஞ்சிரத்துச்
சூடினுள் தோத்திரங்கள் சொல்லினு-ளாடியவன்
298
செய்யதிருத் தோள்சேரச் சிந்தித்தா ளிவ்வமய
மையன் றிருத்தே ரகற்றினுள்-மைபுமிடை

தெரிவை

மங்கை யொருத்தி வளருந் தெரிவையாள்
பங்கயம் பங்கம் படைத்ததென-விங்கணைந்த
300
செந்திருவே யன்னுள் திகழ்நான் முகன்சிகுவை
நந்திவளர் வாணியெனு நாரியா-ளந்திவண
301
னுண்ட விடமனைய வோதியா ணீண்முடியிற்
கொண்டபிறை யன்ன குளத்தினுள்-புண்டரிகம்
302
போன்ற விணைவிழியாள் பொன்குமுத வாயினு
ளான்ற வருக்கை யணிமொழியாள்-சான்றகமு
303
காகுங்கண் டத்தினு ளம்பெறற் கலசமெனு
மோக மளிக்கு முலையினு-ளாகத்தி
304 [யாள்
லாரு மெறும்பொழுங்கை யொக்குமுரோ மக்கொடி
சாருந் துடியனைய தண்ணிடையாள்-தேரிலுறு
305
தட்டனைய வல்குலாள் தந்திக்கை போற்குறங்காள்
மட்டவிழுங் கஞ்சமெனு மாவடியா-ளிட்டமுடைப்

பெம்மான் மயூரகிரிப் பேராளன் றேளிணைகள் [மிகு
கொம்மைமுலை சேர்கவெனுங் கொள்கையளா-யம்மை
307
வன்னியைமா யூர்கிரி மன்னன்பாற் றாதனுப்பிக்
கன்னவிள வேளின் கணைபாய-மன்னித்திப்
308
போதுவர வுள்ளம் புழுங்கி நெடிதுயிர்த்து
மாதவனை யெண்ணி மனப்பதைத்துக்-காதலுறுஞ்
309
சேடியரை நோக்கிச் சிறியேன் படுந்துயரங்
கூடேவர்க ளாற்றிக் குறைதவிர்ப்பார்-மாடுவளர்
310
வேணிலா னையார் விரட்டுவா ரென்றுரைத்தாள்
பானிலா வன்னமுகப் பண்பினருள்-மானனைய
311
சேடி யொருத்தி திகழுமிசை யாழ்வாங்கி
நாடறிய வேலிறைவ னுனிலத்திற்-றேடகங்கள்
312
மன்னு முயர்வாவி வான்காழி நன்னகரிற்
பன்னுசிவ பாதமனப் பண்புடையா-ரின்னலுறுந்
313
தேசஞ் செழிக்கச் சிவனருளை வேண்டவவ
ராசில் மனங்களிக்க வன்னவற்குத்-தேசுமிகு
314
சம்பந்த னுதித்த தன்மையுந் தோணிபுரத்
தம்பனைய கண்ணு ளருள்முலைப்பா-லும்பரெலாம்
315
போற்ற வருந்தியதும் பொற்றாளம் பெற்றதுவு
மேற்றமுத் துச்சிவிகை யேறியதும்-சாற்று

முயலகனோய் நீக்கியது முத்துவிதா னம்பெற்
றியலிசையாற் பொற்பதிக மேத்தி-வயல்சூழும்
317
வீழி மிழலை விமலன்பாற் பொற்காசு
தோழமையாற் பெற்றுச் சுருதிவனம்-வாழ்கதவம்
318
பூட்டியதுந் தென்னனுடல் பொங்குசுர நீக்கியது
மேட்டை நெருப்பிட் டெடுத்ததுவுந்-தீட்டுதமிழ்
319
ஆற்றிலெதி ரேறவிடு மப்பெருமை யுங்கொடிய
கூற்ற வமணரைக் கூர்க்கழுவி-லேற்றியது
320
மோடம் பதிகத்தா லோட்டியதும் புத்தநந்தி
மூடன் றலையிலிடி மூட்டியது-மேடகத்துச்
321
செங்கனிக ளேற்றியதுஞ் சீர்ச்சிவநே சர்மகளி
னங்கம்பெண் ணாக வருளியதுந்-துங்கவொளி
322
தன்னிற் கலந்ததுவுஞ் சாரிசையிற் சாற்றினாள்
மன்னு மிரவ்கன்று வானொளியான்-துன்னினான்
323
பல்லியங்க ளார்ப்பப் பழுதில் குமரன்றா
னெல்லையினி லுற்றனனென் றேங்குகிளி-சொல்லவே
324
வேள்யானை யன்ன விரைக்குழலா ளன்னவனின்
வாள்கணை யன்ன மதிமுகத்தாள்-வேள்கரும்பை
325
யொத்தபுரு வத்தினா ளோங்குமுரா சக்கண்ணாள்
கத்துமவன் காகளம்போற் காண்மொழியாள்-வித்தை

[மிகு

மாமகுடம் போலும் வனமுலையாள் மால்மகனுக்
கேமமுறு காலம்போ லேகினு-ளுமவேல்
327

வேந்தன் றிருவடியில் வீழ்ந்து வணங்கினள்
சேந்தா வெனதாவல் தீரென்று-ளேந்துமிழை
328

சொல்லு மிதுகேட்டுத் தோழி யொருத்தியவண்
சொல்லுவாள் மஞ்ஞைமலைச் சோதியே-வல்லாய்நின்
329

மாமலையோ வெந்தலைவி மாமுலையோ நன்றென்று
வாம முறக்காண வந்திடாய்-நாமவே
330

னற்படையோ வெந்தலைவி நல்விழியோ நன்றென்று
சொற்படையா யிங்கணைந்துசொல்லுவாய்-வெற்பனே
331 [யோ

வள்ளிமான் தாய்விழியோ மானிவளின் வான்விழி
யுள்ளவிவை யின்னன் றுரைத்திடாய்-தெள்ளுதமிழ்
332

நாதா வெனவுரைத்தா ளுதன் றிருத்தேரி
லோதா த கன்றனன்பி னேர்வனிதை-பூதலத்துக்

பேரிளம் பெண்

காமன் றவத்தாற் கடிதி னடைந்ததிரு
மாமயிற் பேரிளம்பெண் வாய்மையாள்-காமனூல்
334

கற்றுப் பயனறிந்த காரிகை வானழகு
பெற்ற மகளனைய பெட்பினு-ளுற்றமதன்
335

கைக்கணையி னீலக் கணையன்றி மற்றவற்றூற்
புக்க செயலறியும் பொற்பினள்-மிக்கமலர்

சூடினா னன்றுசுப்புச் சோரு மெனநினைந்து
தோடலர்கள் சூடாச் சுரியலாள்- வேடனையுந்

337

]பான்

கூற்றினையு மேவல்கொள் கூர்விழியா ளெண்ணான்
சாற்று மிசைவெல்லுந் தண்மொழியா-ளாற்றவிடை

338

தாங்குமோ வென்றறியச் சாய்ந்ததோ வன்றியிடை
தாங்கா தெனவறிந்து தாலமுற-வாங்கிருந்து

339

[யெலாந்

நோக்குகின்ற தோதன்னை நோக்கியெதிர்த் தோளை
தாக்கி யலுத்த தகைமையோ—மூர்க்கர்முன்

340

சொல்லுமொழி கேளாது துன்பமுற்றுப் பின்புகுனி
நல்ல பொருள்விளக்க நண்ணியதோ-வல்லதிசை

341

யெட்டுச் சிலம்பைவெல வெண்ணிக்காஞ் சீபுரத்தை
முட்டியதோ வென்று முலையினாள்-வெட்டவெளி

342

யான விடையினா ளாலவட்ட வல்குலாள்
மான வனிச்சமெனும் வானடியாள்-வேன்முதலைக்

343

காலைபகன் மாலை கடிதி னடைந்திறைஞ்சும்
வேலை யுடையாள் விமலனடி-சாலவே

344

யண்ணா மலையி லருணகிரி யாரணியும்
பண்ணார் திருப்புகழைப் பாடுவாள்-பெண்ணாவாள்

345

வள்ளி யெனுந்தனது வன்னியினை நோக்கியுயர்
வள்ளி மணாளன்றன் வண்புகழை-வள்ளயிலார்

பெம்மான் றிருப்புகழைப் பேசெனச் சொல்லவது
வெம்மான் புகழை யிசைக்குங்கா-லம்மான்சேய்
347
வீதியினிற் றேரில் விளங்கினுன் பேரிளம்பெண்
காத லுடனணைந்து கைகூப்பி-யோதிவருஞ்
348
சீர்ப்புகழ்க் கூட்டத்திற் சேர்ந்து திருப்புகழாற்
சூர்ப்படைவென் ருேனைத் தொழுதிறைஞ்சி-யார்ப்
349 [புடன்
செல்லுங் குழுவுடனே தேர்நிலைக்குச் சென்றிறைவன்
வல்ல முருகனடி வந்தித்துச்-சொல்லரிய
350
வான்பெருமை பேசி வளரிறைவன் ருர்பெற்றுத்
தான்பெரிய ளாயினுள் சாருமிவ்வா-ருனிறைவன்
351
பாரிறைவ னண்டர் பதியிறைவன் மாமஞ்ஞை
யூரிறைவன் போந்தா னுலா.

---

வாழி.

வாழி மயூரகிரி வாழி முருகனடி
வாழி யவனடியார் வாழியவே-கோழியயில்
மாமயிலும் வள்ளி வருதெய்வ யானையுஞ்
சேமமுற வென்றுஞ் சிறந்து.

முற்றிற்று.

---

# அரும்பதவுரை.

காப்பு: மாதங்கவண்ணத்தவன்-பெரிய தங்கம் போன்ற நிறத்தையுடையவன். மாதங்க வண்ணத்த வன்-யானை முகத்தவனாகிய அழகிய பெருமான்-
3-வது கண்ணி: தத்தை-கிளிபோன்ற தடா தகைப் பிராட்டியார், 8. கொற்றவர்கள்-அரசர்கள், 9,ஏதம் -துன்பம், 11. மகபதி-இந்திரன், 14- விற்பன்னன்-புலவன், 20. அயில்-அழகு, 21. தொய்யல்-அன்பு, 31. முட்டத்தான்-முட்டம் என்ற திருப்பதியையு டைய திருமால், 32. வால் அனம்-வெண்மையாகிய அன்னம், சாகசம்-கோபம், 33- கலுழன்-கருடன், 45. தெய்வஉவா-தெய்வயானை, 51. சிந்தூரம்-கடம்பு காடம்-மதம், 52. மள்ளர்-குறிஞ்சிநில மக்கள், 60. வெம்பந்தம்-கொடியபாசம், 65, வேதச்சிலம்பி னன்-வேதங்களாகிய சிலம்புகளையுடையவன், மயூர மெனும் சீதச்சிலம்பினன்-மயிலென்று சொல்லப்படு கின்ற குளிர்ச்சியாகிய மலையையுடையவன், 66. அணிநீபவரகுவான்-அழகிய கடம்பு மாலைகளை யணிந்த தோள்களையுடையவன், வாகுவான் பாந்தள் வெற்றியையுடைய நீண்ட பாம்பு, 67. முப்புள்-சூர னாகிய பறவை இரண்டும், வாகனமாகிய மயிலொன் றும், 71 சேறு-சேவல், 72 பள்ளி-ஊர், 74. வேதிக் கும்-வழிபடுகின்ற, 75 வேதிக்கும் - துன் புறுத்து கின்ற, 81 காதினன்-அழித்தவன், 95 மல்லாகொடி-வள்ளிநாயகி, 113 உவணம்-கருடன், 116 காரியிரு வர்-ஐயனார் பைரவர் புரோகதி-நாய், 120 கஞ்சிகை-விமானம், 135 ஆட்டியர் - பெண்கள், 137 சீரகம்-சிறந்ததாகியஇடம், 139 சாலம்-சன்னல், 145 வாகு -தோள், மரா-கடம்பு, 149 காரூர்தி - இந்திரன்,

150 மால்-மயக்கம், சேறு-வாசனை, வாலை-இளமை, 156 மந்திரம்-கள், 158 நாண் - ஆபரணங்கள், 159 செண்டு-பூச்செண்டு, 161 பார்மகன்-மன்மதன் 167 பயோதரம்-முலை, 168 வல்லி-கிளி, புளகம்-கண்ணாடி, 176 மொய்ப்பு-தோள், 178 வேட்டக் கிரியை-திருமணச்சடங்கு. 192 சிகாவளம் - மயில், 208 தோகைவரை-மயூரகிரி, 227 கூளி - சேர்க்கை, 232 சாரங்கம்-மான், சாரங்கி-யாழ், 236 சூடகங்கள்-சிலம்புகள், 242-பெருமாலை-பெரிய மயக்கம் 251 வில்கோலமானாள்-வில்போன்ற அழகையுடையவள் ஆலங்கரட்டினாள்-விடத்தைக் காட்டுகின்றவள், கோணம்-மூக்கு, எள்பூவணத்தினாள்-எள்பூவைப் போன்ற அழகையுடையவள், 252 வஞ்சைக்களத் தாள்-சிறிய கழுத்தையுடையவள், வல்அம் - அழகிய சூதாடுகருவி, 253 குற்றுவம்-குறுகிய ஆலிலை, மாயூரம்-மயில்,255 மாநாகர்கோவிலாள்-பெரிய ஆதிசேடனின் படத்தையொத்தவள், கஞ்சன் - பிரமன், 258 ஆர்-ஆத்திப்பூ, 264 சயந்தனம்-தேர், 274 களகண்டம்-குயில், 294 எந்தல்-பெரிய, 300 சிகு-நாக்கு 302 வருக்கை-பலாச்சுளை, 303 ஆகம் - சரீரம், 304 துடி - உடுக்கை, 305 தந்திக்கை - துதிக்கை, குறங்கு-தொடை, 324 வேள்யானை-இருள், கணை-தாமரை, 325 முரசம் - கடல், 338 தாலம்-பூமி 345 அயில்-வேல்

இந்நூலாசிரியரது மற்றைப் பிரபந்தங்கள்:

1 குன்றக்குடிச் சுப்பிரமணியர் தோத்திரப் பதிகம்
2 திருஞானசம்பந்தர் பதிகம்
3 திருஞானசம்பந்தர் இரட்டைமணிமாலை
4 திருப்பரங்கிரி மும்மணிக்கோவை
5 நடராசர் நவமணிமாலை
6 குமரகுருபரசுவாமிகள் போற்றித்திருவகவல்
7 ஞானசம்பந்தர் நான்மணிமாலை
8 திருச்செந்திலிருபாவிருபது
9 ஞானசம்பந்தர் நவமணிமாலை
10 ஆவினன்குடி அந்தாதி
11 திருஞானசம்பந்தர் திருப்பள்ளியெழுச்சி
12 திருவேரகவருக்கமாலை
13 கோமதியம்மை பஞ்சரத்தினம்
14 ஞானபுரீசுவரசுவாமி பதிகம்
15 ஞானசம்பந்தருலா
16 குன்றுதோருடல் வெண்பா
17 ஞானசம்பந்தர் ஒருபாவொருபது
18 பழமுதிர்சோலைப் பதிற்றுப்பத்தந்தாதி

O-1,14MR15,M
N57
78293

செட்டிநாடு அச்சகம்
தேவகோட்டை
13-10-56